
துரோபதை கல்லாய்
சமைந்த நாடகம்.

துரோபதை

கல்லாய் சமைந்த நாடகம்

[சொப்பீர்ணகை [illegible]]



மலர்மகள் பதிப்புரிமை விலை அணா 12

அ. இராஜரத்தின முதலியார்
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை 1.

ஸ்ரீ வீரபாஞ்சாலி துணை

கெம்பிர்ஞுசூரன் வதை என்னும்

துரோபதை கல்லாய்சமைந்த

நாடகம்







கூடலூர்தாலுக்கா வரிஞ்சிப்பாக்கம்

ரா. வே. கோதண்டராம உபாத்தியாயர்

இயற்றியதை,

திருத்துறையூர் குறத்திகிராமம் வை-வீரப்படையாட்சி

அவர்களிடம் சர்வ சுதந்தரமும் பெற்று,

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

பதிப்புரிமை] 1956 [விலை அணு 12

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்: ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர் தாலுக்கா வரிஞ்சிப்பாக்கம். கோதண்டராம உபாத்தியாயர் அவர்களியற்றிய "கெம்பிர்னாசூரன் வதை என்னும் துரோபதை கல்லாய் சமைந்த நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை திருத்துறையூர் குறத்திகிராமம் வை. வீரப்படையாட்சி அவர்களிடம் சர்வ சுதந்தரமும் பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை ப்ரகாசனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கிறேன். ஆகையால் இந்தப் புத்தகத்தை என் உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

இப்படிக்கு

அ. இராஜரத்தின முதலியார்,
23, தாண்டவராயப்பிள்ளை வீதி,
சென்னை-1.

ஸ்ரீ

வீரபாஞ்சாலி துணை

கெம்பிர்ஞசூரன் வதை என்னும்

துரோபதை

கல்லாய்சமைந்த நாடகம்

விநாயகர் கவி

சத்தியின்புதல்வன் சங்கரன்மைந்தன் தாளடியில்
தித்திக்கும்கரும்பும் திணைமாவுங்கொண்டுதினம்படைத்து
வித்தைக்குமுதல்வா விநாயகாவுந்தன்மெல்லடியில்
பத்தியாய்க்கொட்டி பதமலர்பணிந்துபாடினேனே.

பொது வசனம்

அகோதெப்படியென்ருல் அஸ்தினுபுரிப்பட்டணத்தை தகத்தோடும் ராச்சியபரிபாலனம் செய்துவரப்பட்ட துரியோதன மகாராசன் சகுனிமாமன் கர்னமகாராஜன் சபையைநாடி வருவது.

துரியோதனன் வருகிற கவி

அதிர்முரசுபேரிடக்கா டமரமோங்க
அந்தணர்கள்இருபுரமும் வேதம்பாட
சதிர்பெருகும்ரம்பை ஊர்வசியாளாட
சகுனிசல்லியன்கர்னனுடன் ரதத்திலேறி
எதிரில்லாமுரசு எக்காளம்ஊத
இருபுரமும்சந்திரவட்டக் குடைகவிக்க
பதிபுகழும்அஸ்தினு புரிக்குவேந்தன்
பாக்ஷாதிதுரியனிதோ வருகின்றேனே.

துரியோதனன் தரு

திரைகடலுலகெல்லாம்
தீரன்கொலுவதாகினேன்
சூரியன்கொலுவதாகினேன்

ஒருமிக்கஅரசாளும்
ரதத்திலேறி



ஆரவாரங்களுடன் அண்ணன்கர்னனுடனே
தாரச்சின்னம்முழங்க சகுனிசல்லியனுடன்
சுருள் சந்திரகுலந்தனில் வந்திடுந்தீரன்
சிந்தைமகிழ்ச்சியாய் வந்தஐய்யாரன் தி

யானைரதஞ்சேனைகள் அணிஅணியாய்நெருங்க
வானவர்கவிவாணர் வந்துஆசீர்வதிக்க
சுருள் வஞ்சனைசெய்துமே பஞ்சவரைவரை
மிஞ்சியேகானகம் அஞ்சாமல்ஓட்டினேன் தி

பாஞ்சாலன்பெற்ற பாவைபசுங்கிளியை
வஞ்சனைசெய்துபார்த்தன் அஞ்சாமலிட்டான்மாலை
சுருள் அதுமுதலென்மனம் பதருதேமாமா
சதியதுநேர்ந்துமே தவித்திடலாமா தி

பாண்டவாள்வனஞ்சென்று ஆண்டுமூன்றாச்சுதே
வேண்டாமெனக்குசெங்கோல் ஆண்டிடும்சகுனிமாமா
சுருள் வினவியபடியே துரோபதையாளை
அனலாயெரிகுதே கழிக்கிறேன்நாளை தி

துரியோதனன் கவி

அண்ணாயென்சகுனி மாமா அஸ்தினாபுரத்தைநீங்கள்
எண்ணம்போல்ஆண்டுக்கொள்ளும் எனக்கினிபட்டம்வேண்டாம்
விண்ணாணம்பேசுவாளே மெல்லிபாஞ்சாலிகண்டால்
குண்ணியேமனதுவாடி குவலயம்ஆளுவேனோ.

துரியோதனன் வசனம்

கேளாய் அண்ணா கர்னமகாராஜனே! சகுனிமாமா யாகசேனி யாகிய துரோபதாதேவியை பாஞ்சாலராஜன் சுயம்வரஞ் சோடித்து தேசத்து அரசருக்கு நிருபம் எழுதினான். நான் சென்று வில்லை வளைக்க அருசாலையில் போகும்போது வலுவில்லாத தடிப்பயல் என்னை ஏமாற்றி துரோபதையை மாலைசூட்டினான். யாகசேனியை கொண்டுவரும்படி நேற்றையதினம் சயிந்தவனை அனுப்பினேன். அவனை அவமானப்படுத்தி பஞ்சபனுதி பசங்கள் அனுப்பிவைத்து விட்டார்கள். யாகசேனி ஏக்கமே ஏக்கமாய் இருக்கிறது அதற்கு ஒரு ஆலோசனை சொல்லும் சகுனிமாமா.

சகுனிமாமன் கவி

வஞ்சகங்கபடில்லாத மதிகுலசகுனிமாமா
பஞ்சவரைவர்தன்னை பகர்வனம்ஓட்டிவைத்தேன்
அஞ்சாதேமனதிலுள்ள ஆபத்தைதீர்த்துவைப்பேன்
சஞ்சலம்மனதில்வேண்டாம் சலுகியில்உரைத்திடாயே.

துரியோதனன் தரு

ஆசைக்கிசைந்தஎந்தன்மாமா ஐவரைவனம்போகலாமா
பாசமுடனேநீர் பகடைசூதாடச்செய்து
பஞ்சவரைவர்களை பகர்வனம்ஓட்டிவைத்தேன்
சருள் பக்ஷம்என்மீதில் இஷ்டம்வைத்துமே
கஷ்டந்தீர்த்துமே ரக்ஷித்திரோனை ஆ

சகுனிமாமன் தரு

வணங்காமுடிபடைத்ததுரியா வாழ்கசெங்கோல்பெருகமுடி
அனலில்விடும்நெய்யைப்போல் ஆவியுமுருகியே
வினவியேயுனக்காக வேணப்பாடுபட்டேன்
சருள் வெய்யல்பட்டுமே மெழுகுஉருகும்போல்
கையுஞ்சோர்ந்துமே மெய்யுந்தளர்ந்தனே வ

துரியோதனன் தரு

செங்கோலரசெனக்கு வேண்டாம்மாமா
சென்னியில்முடியேனோ பூண்டேன்
பங்கமாகவேசொல்ல பார்ப்பவர்நகைப்பாரே
சருள் பாவைதுரோபதை நேரில்கண்டேனை
ஆவிசோர்ந்திட அலறிசிரித்தாளே செ

சகுனிமாமன் தரு

பாவைதுரோபதையாள் பஞ்சவனாமாலையிட்டு
பட்டசுகம்போதாதோ மருகோனே
ஆவல்தீரும்படிக்கு அவளைநான்கொண்டுவந்து

சுருள் அத்திநகர்தனில் சித்தம்மகிழ்ந்திட
முத்தந்தரும்படி பற்றிவருகிறேன் பா

துரியோதனன் தரு

நல்லசந்தோஷமானேன்மாமாஐவர் நாட்டினில்காலைவைக்கலாமா
வல்லவரோஐவர்வந்தால் சொந்தம்பாராட்டி
மறுபடியும்பதிமூன்றுவருஷம் வனம்ஓட்டுவேன்
சுருள் மட்டிப்பசங்களை காட்டில்அலைந்திட
அட்டியில்லாமலே திட்டஞ்செய்குவேன் நல்

சகுனிமாமன் கவி

பாலையுஞ்சலத்தையொன்றாய் பாவிக்குந்துரியபூபா
ஆலைவாய்கரும்பைபோல ஆவியுந்தளரவேண்டாம்
சோலைசூழ்வனத்தில்சென்று துரோபதையாளைக்கண்டு
காலதாமதமில்லாமல் காரிழையாளைசேர்வாய்.

கர்னன் கவி

அறிவில்லா சகுனிபோடா ஐவரும்தின்றசோற்றில்
தெரியாமல்விஷங்கலந்தாய் சீமையிலுள்ளவர்க்கும்
கருமுகில்வண்ணனை கபடநாடகன்கண்டாலே
வருகுமேகேடுனக்கு மதிகெட்டமூடாபோடா.

துரியோதனன் தரு

ஐவர்இறந்தாலே அஸ்தினபுரிநகர்
ஆள்வேன் நானே ஆள்வேன்

அந்தஅழகுதுரோபதையாளை கொண்டுவந்துநானே
சேர்வேன் அண்ணா சேர்வேன்

பொய்யாகஅர்ச்சுனன் மாலைகழுத்தினில்
போட்டு சபையில் போட்டு

பொற்சபையில்வில்லை நானேவளைத்திட்டேன்
ஏற்றி நாணி யேற்றி

தையல்துரோபதை சந்தோஷமாகினாள்
பார்த்து என்னை பார்த்து

தடிப்பயல் அர்ச்சுனன் முடியாமல்வில்லதை
பார்த்து என்னைச் சேர்த்து

சதிசெய்துஎந்தனை மதிமோசஞ்செய்தானே
பாவி கொடும் பாவி

அந்தமடையனுக்காகநீர் தடைசொல்லவந்தீரோ
அண்ணா எந்தன் அண்ணா ஐ

கர்னன் தரு

பத்தினிபாஞ்சாலியின்மேல் பழுதுநினைந்திட்டாலே
பங்கம்வந்துநேருமடா தம்பி எந்தன் தம்பி
சித்தத்தில்நினைவுவேண்டாம் சீமைபூமிகளெல்லாம்
செங்கோல்செலுத்துமடா தம்பி எந்தன் தம்பி
சுருள் சேர்வதினாலே பார்மிசையிலுனக்கு
கார்பெருங்குழலாலாள் கலகங்கள்நேரும் பத்

துரியோதனன் தரு

அண்ணாஐவர்கள்மீது பாசம்விசுவாசம்
அதைஎண்ணிப்பார்த்தாலென்மேல் ரோஷம்விசுவாசம்
விண்ணாணம்பேசாதே மெல்லிபாஞ்சாலியாள்
எண்ணம்நிறைவேற இக்ஷணஞ்சேருவேன் அ

சகுனிமாமன் தரு

அன்புக்குரியஎன்மருகா ஆசைமருகா
கர்னன்வம்புவழக்காடி வஞ்சகம்வைத்துமே
தெம்புசொல்லிஇங்கே சீவிக்கிறான்பாவி அ

கர்னன் தரு

குடிகெடுக்கவந்தமூடா தூரபோடா
இந்தக்குவலயத்தோர்சொல்வாரடா தூரபோடா
படிமிசைஆண்டிடபட்ட பாடுகளெல்லாம்
திடமுடன்புவியோர்கள் சொல்லுவார்நிறுத்தடா கு

சகுனிமாமன் தரு

சொல்லவாய்வரவில்லை சுபத்திரையாலே
அல்லல்படவும்வைத்தாய் சண்டாளா
வல்லவன்விசயன் நல்லவனுகி
மெல்லியைமாலைஇட்டான் நிர்மூடா சொ

கர்னன் தரு

பங்கும்பங்காளிக்குள் பகைபந்தமிருக்கும்
பாகந்தீர்க்கவந்தாயோ நிர்மூடா
தீங்குகள்நினைத்தாய் துரியனைக்கெடுக்க
தில்லுமுல்லுமுனக்கேண்டா படுபாவி ப

சகுனிமாமன் தரு

உள்ளேவுறவும் உதட்டில்பகையுமாய்
உறவாடிகுடிகெடுக்க வந்தாயோ
கள்ளனேஉனக்கு கபத்தகம்அதிகம்
கண்டறிந்துசொன்னால் மனஸ்தாபம் உ

கர்னன் தரு

பகடைகளாடி	பகையது தேடி
பாண்டவாள்வனஞ்சென்றது	உன்னுலேபாவி
விகடகுரோதம்	வேணதைமீட்டி
வீம்புக்குச்சொல்லி	முடித்தாய்சண்டாளா ப

சகுனிமாமன் தரு

வீம்புகள்பேசி	விருதாவாய்யேசி
விண்காலங்கழிக்குறுய்	குருத்துரோகி
பாம்புக்குபால்வார்த்து	வீம்புக்குவளர்த்து
பழிகாரபஞ்சவரைக்	கொல்லநினேந்தாய் வி

கர்னன் கவி

நவதானியம்விளேகின்ற கொல்லேதன்னில்
நடுவில்ஒருபல்லியது இருக்கிட்டாலே
அவகேடுஅதனுலே நேரும்என்று
அரைகுவார்பெரியோர்கள் சுருதிநாவில்
தவபலனேமுன்னஞ்செய்த பாக்கியந்தானே
தளபதியாய்அஸ்தின புரத்தில்வந்து
குவலயத்துராசர்களே கெடுத்துவைத்த
குருத்துரோகிசண்டாளா தூரபோடா.

துரியோதனன் தரு

நில்லும்நில்லும்சண்டை	வேண்டாம்அண்ணு
நிஷ்டூரம்வேண்டாம்	வேண்டாம்மாமா
அல்லும்பகலுமாக	அரிவைதுரோபதைவக்கம்
சொல்லும்எனக்குபதில்	சோருதேஎன்மனது

சுருள்	துயரங்களாகி	சோருதென்மனது
	பயனென்ன	பதிலதுஉரைப்பீர் நில்

பொது வசனம்

அகோதெப்படியென்றல் துரியோதனமகாராஜன் கர்னனேயும் சகுனிமாமனேயும் சமாதானப்படுத்திவிட்டு தனது தேவியாளாகிய பெருந்திருமாதை அழைக்க பெருந்திருவாள் தாதிமார்களே கூட்டிக் கொண்டு சபைக்கு வருகிறவிதம் காண்க.

பெருந்திருவாள் கவி

சந்தனக்களபம்வீச சரிகைபட்டாடைமின்ன
கந்தகற்குழலாள்மாதர் கன்னியர்அருகில்சூழ
விந்தையாய்என துநாதர் விரைவினில்அழைத்தசேதி
சிந்தையில்மகிழ்ச்சியாகி சீர்சபைவருகின்றளே.



பெருந்திருவாள் தரு

பேடைநடைஅன்னம்போல் சாடையில்அதிப்பிரதாபி
பெருந்திருமாதுவந்தாள் நாதரைக்காண
பாடகந்தண்டைகொலுசு பாதசரமிலங்க
நாடெங்கும்புகழ்பெற்ற நங்கையும்வந்தாள்
சருள் நவநீதசேடியர் கவரிகள்வீச
அவனியைவிலைபிடும் ஆரங்கள்கூச பே

பச்சைப்பல்லக்குகள்ஏறி பாங்கியர்புடைசூழ
அச்சமில்லாமல்நாதர் அழைத்தவிதமறிய
சருள் அமரர்சூழ்சபை தன்னையேநாடி
கமலபூஷணி நற்பதந்தேடி பே

காசிமாலையுங்கம்மல் வீசும்பணிகளாட
தேசம்எங்கும் சேனைஞ்சமுகந்தேட
சருள் திலர்தமிலங்கிட மதிமுகவதனி
நலமுடன்மாதர்க்கு இவளொருகர்ப்பினி பே

வன்னியர்சூழ்வரிஞ்சிப்பாக்கம் நகரில்வாசன்
கன்னியபேகோதண்டராம னுந்தாசன்
சருள் கந்தநற்குழலியே பாடுவேனவர்பதம்
விந்தையாய்சபைதனில் மெல்லியேகூடி பே

பெருந்திருவாள் (போகலாம்வாடி என்ற தரு)

சிங்காரசேடிநாதர்க்கு விந்தையாய்ஓடி
கந்தங்கதம்பம்பூசி காரிழையாளுன்னைக்காண
விந்தையுடன்வந்தாளென்று மெல்லியேயுரைத்துவாடி

சுருள் சீக்கிரமாய்பதில் தன்னை நீ கூறடி
பாக்கியபதில்களை அப்புறம் ஓதடி சிங்

தாதி தரு

செல்லுவேன் அம்மா பதிலை சொல்லுவேனம்மா
அல்லலில்லாமலேநான் அறைகுவேன் நாதருக்கு
வல்லவிரையசென்றுபதில் வந்துநான்புகல்வேனம்மா
சுருள் வஞ்சியேஉன்பதம் தஞ்சம்மலாடி
அஞ்சாமல்சென்று ஆசைநாதரிடம் செ

பெருந்திருவாள் தரு

ஆசைக்கிசைந்தநாதர் ராசனேயழைத்த
பாசமதைசென்றுகேளடி பாங்கியேநீதான்
பத்தாவந்தாபோகூறடி.
தேசமெங்குமதிக்கும் செங்கோல்கொடிபறக்கும்
ஓசையுடனேசென்று உற்றபதில்கேட்டுவாடி
சுருள் உற்றயென்சேடியே சித்தம்மகிழ்ந்துநீ
சற்றுகோத்திற்குள் சங்கதிகூறடி ஆ

தாதி தரு

பாதம்பணிந்தேன்சேடியாள் அரசேஉந்தன்
பாதம்பணிந்தேன் சேடியாள்
பாதாரவிந்தந்தன்னில் பலசாதிமலர்கொண்டு
ஆதாரமாகவே அடிபணிந்தேன்
சுருள் அரிவைபெருந்திரு மாதுசேடியாள்
கருணை கூறவீர் கழலடிதனில பா

துரியோதனன் தரு

மகாராசியாகவாழ்குவாய் சேடியேஎன்றும்
மகாராசியாகவாழ்குவாய்
மகாராசியாகஎன்றும் மாங்கல்யம்சுகித்திருப்பாய்
தகவல்கள் இன்னதென்று சாற்றுவாய்மடமானே அ

சேடி தரு

அரிவைபெருந்திருவாள் சமுகந்தன்னில்
ஆக்யாபித்துவர அனுப்பிவைத்தாள்
கருணையின்னதென்றுசுவாமி கட்டளையின்றுஉரைத்திடுவீர் அ

துரியோதனன் கந்தார்த்தம்

சேதிகள்உரைக்கவந்த சேடியேசொல்லக்கேளாய்
நாதரும்அழைத்தாரென்று நறுமலர்குழலாள் தன்னை

பேதகம்ஒன்றில்லாமல் பெருந்திருவாளை இங்கு
காதலாய்வரவழைத்து,

தரு

கன்னியேபதில்சொல்லடி சீக்கிரம்சென்று
மன்னவர் அழைத்தாரென்னடி
சின்னஞ்சிறுவயதில் உன்னைமாலையிட்ட
கண்ணாளன் தன்னைக்காண கடுக அனுப்படி கன்

பெருந்திருவாள் தரு

பாதமேசரணம்நாதா உந்தன்
பாதமேசரணம்
பாதாரவிந்தத்தில் பலசாதிமலர்கொண்டு
காதலாய் அர்ச்சித்தேன் கமலமலர்ப்பாதா
சுருள் கன்னியாளுமே இன்னிலந்தனில்
என்னை ஆதரி மன்னர்மன்னவா பாத

துரியோதனன் தரு

ஆசைக்கிசைந்தகண்ணாட்டி அரிவைபெருந்திருமாதேநீவாழி
பாசவலையில்சிக்கிபாவி மன்மதன் வாதையால்
நாசமாக்குறேனென்னை நானென்னசெய்வேனடி
சுருள் நயகுண துரோபதை தன்னைச்சேர்ந்திட
தயவுவையடி சென்றுவருகிறேன் ஆசை

பெருந்திருவாள் தரு

அந்தவார்த்தையைவிட்டு போகாதீர்நில்லும்
சொந்தமென்றுசுபத்திரை அந்தநாளில்சென்றீரே
வந்தஅவமதிப்பை வாய்விட்டுசொல்லப்போமோ
சுருள் வல்லவா அதை சொல்லலாகுமோ
அல்லல்வந்திடும் நில்லுமநில்லுமே அந்த

துரியோதனன் தரு

சொந்தமல்லவோசொல்லடி துரோபதையாளும்
சொந்தம்என்றுபாஞ்சாலன் அந்தநாளில்வில்நாட்டி
கந்தநற்குழலியாளை காண்டீபன்மாலையிட்டான்
சுருள் கண்டால்எந்தனை கொண்டப்புகுவாள்
தொண்டுசெய்திட துணையாய்வருகுவாள் சொ

பெருந்திருவாள் தரு

கண்டால்உந்தனைவைகுவாள் பாஞ்சாலியாளும்
அண்டம்அளந்தமாயன் ஐவர்க்குத்துணையாக
உண்டென்றுவையகத்தோர் உரைத்தும்நீர்கேட்டிலையோ

சரு்ள் உத்தமனுனல் பத்தினிநினைவை
சித்தத்தில்நீரும் வைத்திடலாமா கண்

துரியோதனன் தரு

பஞ்சவர்வாழ்ந்ததொருகாலம் சீச்சீ
பாண்டியன்மகள் அல்லிசெய்தாளந்தகோலம்
அஞ்சவேண்டாம்போடி ஐவரும்என்னைக்கண்டால்
தஞ்சமென்றுஎன்காலில் சரணம்புரிவாரோடி

சருள் தப்புவிசிறுக்கி அப்புறம்போடி
குப்புறத்தள்ளியே கொண்டையறுப்பேன் பஞ்

பெருந்திருவாள் தரு

என்னமொழிஉரைத்தீர்நாதா ஐவர்க்குங்
கண்ணனிருக்கிறுன் துணையாகவேதான்
சொல்லியவார்த்தைக்கு பதில்ஒன்றும்நேராது
என்னிடவார்த்தைதள்ளிஇனி அந்தமொழிவேண்டாம் என

துரியோதனன் தரு

மடையசிறுக்கிநீதடை செய்பலாகுமோபோடி
படைமுகவீரர்க்கு கெடுதிவருமோடிகேடி
இடப்பயல்கண்ணன்என்னை கண்டால்காலில்விழுவான்
நடைமயில்துரோபதைதன்னை பிடிக்கவிடைதாடி ம

பெருந்திருவாள் கந்தார்த்தம்

என்னநான்செய்வேனையோ என்னிடபிராணநாதா
கன்னியாள்யாகசேனி கண்ணீரே ஆறுமாகி
மன்னவாஐவராலே மடிந்திடகெடுதிகாலம்
சொன்னசொல் தனைமறந்து,

தரு

சகமுடன்வாரும் சோபாவின்மீதில்
அமருவோம்வாரும்

விகடகுரோதத்தால் வரும்பலன்ஒன்றில்லை
அகந்தையால்கெட்டவர் அகிலத்தில்வெகுகோடி சக

துரியோதனன் கந்தார்த்தம்

ஆரடி துஷ்டிநீசான் அகந்தையாய்வார்த்தைபேசி
பாரடிபஞ்சவர்மேல் பக்ஷமாய்பேசவந்தாய்
கூறடிபதில்எனக்கு கொடுந்துரோகிஉன்னைவாளால்
தாருமாருய் உன்னை,

தரு

சாடுவேன்பாராய் ஆழியில்வீசி
போடுவேன்நேராய்
தேடிவந்தாயோசீச்சீ அப்புறம்போடி
நாடாண்மைகொண்டுநீ தாசிபோல்வீசுருய் சா

பெருந்திருவாள் கவி

ஐயையோபிராணநாதா ஐவரால்தீங்குநேரும்
பொய்யல்லஎந்தன்வார்த்தை போவதைநிறுத்திவைத்தால்
வையகந்தன்னையாள்வீர் வாராதுகெடுதிஒன்றும்
நையுதேமனமெனக்கு நான்பாவியானேனையோ.

துரியோதனன் தரு

என்னயோசனைசெய்யலாம் சகுனிமாமா
என்னயோசனைசெய்தாய் கன்னியாள்யாகசேனி
மன்னவாவிட்டு வருவாள்அஸ்தினபுரம் என

சகுனிமாமன் தரு

மருகாமனதில்ஏக்கமோ வருகுவாள்
துரோபதைதிரமாய்சொல்லுவேன்
ஒருவிதமும்எனக்கு உள்ளத்தில்விசாரம்வேண்டாம்
பருவமுகவதனிவருக தந்திரஞ்சொல்வேன் ம

துரியோதனன் தரு

சொன்னல்மனதில்சந்தோஷம் மாமா
சோலைசூழ்அஸ்தின புரிநகராள்வோன்
அன்னளில்பஞ்சவர்கள் அவகேடுசெய்துஎன்னை
கன்னியாகசேனியை கடிமணஞ்செய்தார்களே சொ

சகுனிமாமன் கவி

மருகனே துரியபூபா மனம்வாடி தவிக்கவேண்டாம்
ஒருவிதம்உந்தன் மீதில் உள்ளத்தில்நினைவுகொண்டேன்
வருகிறான்கெப்பிர்ணசூான் வல்லவனிடத்தில்சொன்னல்
துரோபதையாளைக்கொண்டு சீக்கிரம்வருகுவானே.

சகுனிமாமன் வசனம்

கேளும் என் அன்புக்குரிய ஆசைமருகனே! நீ யாதொன்றுக்கும் மனவிசாரப்படவேண்டாம். என் சிநேகிதனுகிய கெப்பிர்ணசூான் வருகிறான் அவனிடம் சொன்னல் உன் மனம்போல துரோபதாதேவியை கொண்டுவருவான் இதுதான் யோசனை துரியோதனா.

துரியோதனன் தரு

மாமாயி துவேபோசனே வஞ்சியாள் சஞ்சலம்ஒழிய
ஆமாப் ஐவர்களெல்லாம் அலேகிறார்கானகத்தில்
நாமேசென்று அழைத்தால் தாமதமாய்விடுமே மா

கெம்பிர்ஞூரான் தன்னேபே தம்பிமார்களே
சம்பாமுடன அழைந்துமே
அம்புவியோர் மதிக்க அரிவைதுரோபதையாளே
சம்பரமாய்கொண்டு தாமதமாகபார்ப்பேன் மா

சீக்கிரம் அழைத்துவாருங்கள் சிநேகிதன்
கெம்பிர்ஞூரானேக்கண்டு
சீக்கிரமாகசென்று தாக்கினதன்னேக்காட்டி
ஆக்ரமத்தோடுஇங்கு அழைத்துபதில்கூறுங்கள் மா

போது வசனம்

அகோ தெப்படியென்றால் துரியோதன மகாராஜன் தனது சிநேகிதனுகிய கெம்பிர்ஞூரானே அழைக்க கெம்பிர்ஞூரான் சபையை நாடிவருவது.



கெம்பிர்ஞூரான் வருகிற கவி

அம்புவியுங்கிடுகிடென்ன ஆக்ரமித்து
இருவிழியில் பொறிபறக்க

கும்பல்கும்பலாய் மிருகம்எல்லனக்கண்டால்
சோடை இடி இடித்தாப்போல் பயந்துஓட
சம்ப்ரமுடன் அத்திநகராளுநின்ற
தளபதியும்அழைத்தவிதங் காதில்கேட்டு
கெம்பிர்ணசூரனி கோதா சபையைநாடி
கெர்ஜ்ஜித்துசிங்கம்போல் வருகின்றேனே.

கெம்பிர்ணசூரன் தரு

தீரன்கெம்பிர்ணசூரன்வந்தேனே சூராதிசூரன்
தீரன்கெம்பிர்ணசூரன்வந்தேனே
தீரன்கெம்பிர்ண சூரன்வந்தேனே
ஆரவாரமாய்பாரும் அதிர்ந்திட
மேருமலைகளுந் தூள்கிளம்பிட
விண்டலத்தவர்கள் கண்டுதிகில்பட
தவண்டமல்லரிமுரசதிர்ந்திடவே சல்லரிபம்பை
சப்தகிரிகளுங் கிடுகிடென்றிடவே

சுருள் அண்டராகூதர் என்னைக்கண்டஞ்சிட
அரிவைமாதர்கள் நடனமாடிட
மிரண்டபார்வையுங் கிடுகிடென்றிட
வீராஞ்சித தாளங்கொட்டிட தீரன்

சப்தசாகரங்கள் தூள்கிளம்பிடவே தோமரம்வில்லும்
சண்டகுறடுகள் மண்டிஅசைந்திடவே

சுருள் குண்டலஞ்செவி தன்னில்துலங்கிட
குட்டிச்சிங்கம்போல் மீசைமுறுக்கிட
தண்டுதளபதி மன்னர்நெருங்கிட
தாவும்புஜபல வீராஞ்சிட தீரன்

சிரசில்ரத்தினமுடிதுலங்கிடவே மோகனமாலை
திக்குதிசையெலாம் விலைமதித்திடவே

சுருள் திறமிகுத்திடுந் தேவமாதர்கள்
பாவிஇருபுறம் தாள்வணங்கிட
காத்தில்வச்சிர வாள்துலங்கிட
கனகநவமணி பணிதுலங்கிட தீரன்

கெம்பிர்ணசூரன் கவி

சப்தசாகரத்திலுள்ளோர் தரணியில்என்னைக்கண்டோர்கள்
அப்புரந்திகில்பட்டோட அக்கிரித்தலைக்ரமீறி
செப்புவாய்சிக்கிரம்நீங்கள் க்ஷணநேரத்திற்குள்சென்று
இப்பவேபயணமாகி எமபுரம்ஓட்டிவைப்பேன்.

கெம்பீர்ணசூரன் வசனம்

கேளாய் மந்திரி! சீக்கிரம் யாராவது எனக்கு எதிரிகள் இருந்தால் சமராங்கிய யுத்தத்திற்கு வரச்சொல்லுங்கள் என் புஜமானது படபடவென்று அதிர்ச்சிகொள்ளுகிறது சீக்கிரஞ் சொல்லுங்கள் மந்திரிமார்களே.

கெம்பீர்ணசூரன் தரு

சப்தமேகப்புரவிஏறி தாரணிமன்னர்நடுங்க
அத்திநகர்செல்லுவோம்வாராய் மந்திரிமார்களே
அனைவருங்கும்பலாய்நோய்

கோடையிடித்தாப்போல கொக்கரித்துஉக்ரமாகி
தேடியேசெல்வோம்வாருங்கள் அத்திநகர்க்கு
சீக்கிரம்பயணமாகுங்கள்

சோலைசூழ்வனந்தான்டி சிங்காரமண்டபங்கண்டோம்
வாருங்கள்கும்பலாய்செல்லுவோம் ஒருமையுடன்
வல்லயத்துடனே வருவோம்

தெரிகுதே அஸ்தினபுரம் சூரியன்கொலுமண்டபம்
செயபேரிதன்னைமுழக்குங்கள் டங்காஓசை
சேதிகள் உரைத்துவாருங்கள்

துரியோதனன் தரு

அம்புவிதீரா கெம்பீர்ணசூரா
அருமைசிநேகிதனே வாரும்வாரும்

சம்ப்ரமாய்நீரும் தயவதுபாரும்
தனயன்மேல்கிருபை கூர்ந்துஉட்காரும்

கெம்பீர்ணசூரன் தரு

துரியனேபூபா புவியின்பிரதாபா
துன்பம்வந்தவிதத்தைக் கூறும்கூறும்

அறியவேஎனக்கு தெரியவேயுரைத்தால்
ஆபத்தைஇக்ஷணமே தீர்த்துவைப்பேன்

துரியோதனன் தரு

அஞ்சாதேஉரைக்க தஞ்சம்உந்தனுக்கே
ஐவர்செய்தமோசத்தை சொல்லிவாறேன்

கொஞ்சமாயுரைப்பேன் சஞ்சலந்தீர
கோதைபாஞ்சாலியாலே கொண் அருவடும்

கெம்பீர்ணசூரன் தரு

பாண்டவாள்மீது பகைவந்ததேது
பகருவீர்கானறிய துரியோனே
காண்டீபன்மனைவி கன்னிபாஞ்சாலி
வீண்வார்த்தைவேண்டாம் வேண்டாம்விட்டிடுவீர் பா

துரியோதனன் கவி

என்பகையில்லையென்று என்னிடம்உரைக்கவந்தாய்
மன்னவன்உனது அண்ணன் மலைபோலபக்காசூரன்
தன்னையும்வீமன்கொன்றான் தயவென்னபஞ்சவர்க்கு
பின்னேநீர்யோசியாமல் பயணதாம்பூலங்கொள்ளும்.

கெம்பீர்ணசூரன் கந்தார்த்தம்

தமயனைக்கொன்றவனுன் தாயாதிகளானதாலே
சமயமும்ஆச்சுதுன்மேல் சமரதுபுரிவதற்கு
நிமைநேரத்திற்குள்உன்னை நீனிலமன்னரஞ்ச
எமபுரஞ்சேர்க்காவிட்டால்,

தரு

எந்தன்பேர்மாற்றிவையடா துரியபூபா
சந்தேகம்என்னசொல்லடா
அந்தகன்வந்திட்டாலும் அருஞ்சமர்க்கிளைப்பனு
சொந்தமல்லஜவர்துரியா உந்தனைக்கொல்வேன் எ

துரியோதனன் தரு

பொரும்பொரும்பதாதே ஆசைக்கிசைந்தசிநேகிதா
பொரும்பொரும்பதாதே
பொரும்பொருமநமக்குள்ளே பொல்லாங்குவந்ததில்லை
தர்மநூல்சாஸ்திரப்படி சண்டைநமக்குள்வேண்டாம் பொ

கெம்பீர்ணசூரன் தரு

தமயன்பக்காசூரன்தன்னைக் கொன்றவர்உந்தன்
தாயாதிவர்க்கமல்லவோ
நிமப்பொழுதாகிலும் உன்னைவிடுவேனோ
நில்லும்நில்லுந்துரியா த

துரியோதனன் தரு

உப்புந்சோறுணந்தின்று தப்புநினைப்பது
உத்தமர்க்குத்தருமமா

செப்புவார்உலகத்தோர் சாஸ்திரநூற்படி
எப்போதுஞ்சண்டைவேண்டாம் உ

கெம்பிர்ணசூரன் தரு

படுகளத்தில்வந்து ஒப்பாரிபார்ப்பது
சரியாஅடாதுரியா
செடுநாளாய்கொன்றவன் தெரியாமலிருந்தேனே
வாடாசமர்க்குவாடா ப

துரியோதனன் கவி

உந்தனைபெரிதாய்நம்பி ஓலைநான்அனுப்பிவைத்தேன்
எந்தனைகொல்வதற்கா யெத்தனித்திங்குவந்தாய்
அந்தநாள்இந்தநாளாய் ஐவர்கள்எனைவஞ்சித்தார்
சிந்தையுங்கலங்கிவாடி சிவசிவாகதறலானேன்.

துரியன் புலம்பல்

ஐயோதெய்வமேயென்னை அஸ்தினபுரிதன்னில்
அழுதுபுலம்பஎன்னை விதித்தாயோ
பாழுஞ்சென்மமெடுத்து பட்டசுகங்களென்ன
பரிதாபங்கள் இல்லையோ ஓதெய்வமே
கட்டிக்கட்டியாய்தேனுங் கற்கண்டுஉண்டாலும்
இட்டசபதம்முடியா என்னுயிரைமாய்த்துக்கொள்வேன்

கெம்பிர்ணசூரன் கவி

உயிர்விட்டுக்கொள்ளவேண்டாம் உத்தமசினேகிதாகேள்
அயன்எழுத்ததுபோலாகும் அழுவதைநிறுத்திவையும்
தியங்கிமயங்கிடாமல் சினேகிதாஎழுந்திருந்து
பயணதாம்பூலந்தந்தால் பாஞ்சாலியைக்கொண்டுவாறேன்.

துரியோதனன் சந்தோஷம்

எட்டாதகொம்புத்தேனை இச்சித்தவேடன்போலும்
கட்டியேரிஷபம்வந்து கைதனில்பாய்ந்தாற்போலும்
திட்டியேஅம்புகையில் திடமுடன்தைத்தாற்போலும்
பட்டென்றுஎழுந்திருந்து,

தரு

பயணத்தாம்பூலங்கொடுத்தேன் காணகஞ்செல்ல
பயணத்தாம்பூலங்கொடுத்தேன்
பயணத்தாம்பூலம்பெற்று செயபேரிகையடித்து
நயகுணபாஞ்சாலியை தயவில்லாகொண்டுவாரும் பய

கெம்பிர்ணசூரன் தரு

அத்திநகர் தன்னைவிட்டு   ஆக்கரித்துடக்ரமாகி
சித்திரரதத்தில்ஏறினேன்   புரவிதன்னை
எத்திசைகடுங்கசாடினேன்   அ
பக்காசூரன்என்அண்ணனை   இக்கணத்தில்கொன்றவனை
பதறநதறவாட்டுவேன்   கிழித்தெறிந்து
உதிரஞ்சிதறவெட்டுவேன்   ப
மடையன்மதவீமனை   மண்டைசிதரும்படி
அடைவுடன்என்வாளால்சாடுவேன்   கானகஞ்சென்ற
ஐவரையும்ஒன்றாய்வெட்டுவேன்   ம

பொது வசனம்

அஹோ தெப்படியென்றால் கெம்பிர்ணசூரன் தன் சினேகிதனுகிய துரியோதனனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பாண்டவாளை தேடிக்கொண்டு வருகிற சமயத்தில் கெம்பிர்ணசூரன் தேவியாளாகிய கற்பகவல்லி தர்பார் நாடிவருவது.



கற்பகவல்லி வருகிற கவி

அற்புதப்பட்டுடுத்தி அத்தர்சவ்வாதுபூசி
நற்புகழ்தாதிமார்கள் நங்கையர் அருகில்சூழ
உற்றதோர்கணவன்போகிற உண்மையை அறியவேண்டி
கற்பகவல்லிமாது கனசபைவருகின்றாளே.

கற்பகவல்லி தரு

அற்புதநடையழகி   சொற்பெரும்மாதர்க்காசி
கற்பகவல்லியாளென்னும்   காரிழைவந்தாள்

உற்றதோர்கணவன்போற — உண்மைகளையறிய
நற்புகழானமாது — நங்கையும்வாறாள்

சுருள் நறுமலர்வாடை — கமகமவென்ன
பருவவயதுடைய — ரதிஇவளென்ன — அற்

கையிலிடும்வளையல் — கலகலவென்ன
மெய்யில்அழகுடைய — மெல்லியும்வந்தாள்

சுருள் மீனெனும்மொழியாள் — மாதர்கூட
கானகமயில்போல் — கன்னியர்பாட — அற்

நெற்றியில்திலர்தந்துன்ன — சித்திரவிழியாளென்ன
ரத்தினபணிகள் துன்ன — நங்கையும்வந்தாள்

சுருள் நடையில்அழகுடைய — வடிவுள்ளமாது
படைமுகவீரர்க்கு — இவளொருதோது — அற்

வன்னியர்குலத்தில்வந்த — லோலன்வரிஞ்சிநகர்
வாழுங்கோதண்ட — ராமபாலன்

சுருள் வாடிஅவர்பதம் — பாடுவோமடி
சேடியேநாமும் — சீக்கிரங்கூடி — அற்

கற்பகவல்லி கவி

அருமையென்சேடிகேளாய் அர்த்தராத்திரியில்நாதர்
ஒருவராய்போறதாலே உள்ளமுங்கலங்குறேண்டி
வருவாரோநாதர் இன்று வாய்மொழிபேசுவாரோ
பருவமாமுகத்தினளே பாங்கியேஉரைத்திடாயே.

கற்பகவல்லி வசனம்

அடிவாடி சேடியாள் நாதர் இன்றையத்தினம் என்னைத் தன்னந் தனிமையாக விட்டு தேரேறிக்கொண்டு போகிறபடியால் என் மனது விசனமாகுதடி சேடி.

கற்பகவல்லி தரு

என்னநான்செய்வேனடிசேடிகளா எங்கிமனம்வாடுறண்டிபாங்கிகளா
கன்னியரேகணவன்பாங்கிகளா கானகஞ்செல்கின்றாரோசேடிகளா

கொங்கைரண்டுஞ்சோருதடிசேடிகளா கூந்தலவிழ்குதடிபாங்கிகளா
எங்கோன்தேடுவண்டிபாங்கிகளா எங்கிமனம்வாடுறண்டிசேடிகளா

தங்கவளையலெல்லாம்சேடிகளா தானுங்கழலுதடிபாங்கிகளா
சயனிப்போமென்றால்பாங்கிகளா தாளவியேமாரன்வதைசேடிகளா

பஞ்சணையின்மேல்சேடிகளாபடுத்துநித்திரைசெய்குறேன்பாங்கிகளா
பத்திரமாய்காவல்பாங்கிகளா புரிந்திருப்பீரடிசேடிகளா

கற்பகவல்லி தரு

ஏலாலோஏலிலேலோ

கண்டனடியம்மா கண்டனடியம்மா
காணுதசொற்பனங் கண்டனடியம்மா

கணவனவர்தேரேறி வந்திடவுங்கண்டேன்
கன்னியரே அத்திபுரஞ் சென்றிடவுங்கண்டேன்

காளை துரியோதிரனும் விடைதரக்கண்டேன்
கானகந்தனில்பர்ண சாலையுங்கண்டேன்

காரிழையே அதிலொரு பெண்ணையுங்கண்டேன்
காட்டகந்தனில்வந்து ராசரையுங்கண்டேன்

கண்ணுளர்யுத்தத்தில் மாண்டிடவுங்கண்டேன்
ஏலாலோஏலிலாலோ தாததிங்கிணஏலிலாலோ

கெம்பீர்ணசூரன் தரு (கொண்டிச்சிந்து)

தேரைநடத்திஓட்டும் மந்திரி
திக்குதிசையோர்நடுங்க உக்ரகோபமாய்

ஆரவாரங்களுடனே மந்திரி
அதட்டிபுரவிகளைத் தட்டிநடத்தி

காடுசெடிவனந்தாண்டி தேரது
கறகறவென்றுதேர் வருகுதுபார்

கானகந்தனில்சென்று ஐவரை
கட்டிவைத்துதிரௌபதையை இட்டுவருவேன் தண

கற்பகவல்லி தரு

போரப்பயணம்எங்கே பிராணநாதா
பொற்கொடியாளைவிட்டு திவ்யபாதா
காரணம்இன்னதென்று கன்னியாளறிந்திட
தீராமாராஜய்யாரா சீக்கிரம்உரைத்திடுவீர் போ

கெம்பீர்ணசூரன் தரு

அரிவையிளங்கொடியே கற்பகவல்லி
ஐவரிடதேவியை பாஞ்சாலியை
தருணம்இத்துரியன் சஞ்சலந்தீர
தாவிஅவளைநான் கொண்டுவா

பருவமுகவதனிதுரியனிடம்பந்தயஞ் செய்துநான்வந்தனடி
நறுமலர்குழலாளேகற்பகவல்லிநான் போகவிடைதந்திடடி

கற்பகவல்லி கவி

தானென்ற மமதைகொண்டு பத்மாசூரன்
தரணிதனில் நீருக எரிந்துவிட்டான்
வானேர்கள் புகழுகின்ற மாபலிதான்
மனங்கொடுத்து பாதாள லோகஞ்சேர்ந்தான்
நானேதான் உலககர்த்தன் என்றஇரண்யன்
நாஸ்தியாய் பேரில்லா தழிந்துவிட்டான்
கானகத்தில் வசிக்கின்ற ஐவருக்கு
கண்ணபிரான் துணையாகுஞ் செல்லவேண்டாம்.

கெம்பிர்ணசூரன் தரு

மடையசிறிக்கிநீபோடி என்னைத்
தடைசெய்யவந்தாயோ ஓடி
அடவியில்ஐவர்க்கு ஆசிருந்தாலென்ன
படையெடுத்துசென்ருல் பஞ்சாகவாட்டுவேன் ம

கற்பகவல்லி தரு

போகாதீர்போகாதீர்நாதா உந்தன்
பொற்கொடியைவிட்டுவேதா
ஆகாதசொர்ப்பனம் அரிவையாள்கண்டேனே
வேகமாய்சென்ருலே வீண்பழிநேர்ந்திடும் போ

கெம்பிர்ணசூரன் தரு

பித்தந்தலைக்கேறிநாயே நீயும்
பினத்துகிருயோடிபேயே
அத்துமீறிவந்து அலங்கோலஞ்செய்கிருய்
கத்திரிக்காய்சின்னி கைவாளால்வீசுவேன் பி

கற்பகவல்லி தரு

கண்டிதஞ்செய்குதீர்நாதா என்னைத்
துண்டிப்பேனென்றுமேவேதா
கொண்டகணவரால் கோதையர்மாண்டாலே
உண்டென்றுமோக்ஷமும் உலகத்தார்பழமொழி க

கெம்பிர்ணசூரன் தரு

கற்றகல்வியெல்லாம்பேசுருய் அடி
அத்துமீறிவீணுய்வீசுருய்
உத்தமிஇவளானல் உகபலன்சொல்வாளா
சித்திரதாசிபோல் தெருவில்பலுக்குருள் க

கற்பகவல்லி கவி

என்னிடபிராணநாதா எந்திழையாளைவிட்டு
அன்னீதமாகநீரும் ஐவரால்மாள்வதற்கு
மன்னவா அயனெழுத்தோ மங்கைநான்புலம்புதற்கு
கன்னியாள்கூடவாறேன் கானகஞ்செல்வோம்நாதா.

கற்பகவல்லி வசனம்

ஆனல் கேளும் பிராணேசா! தாங்கள் தனியாக செல்லவேண்டாம். ஐவரால் உனக்கு கெடுதி நேரிடும். தன்னந்தனிமையாகச் செல்லவேண்டாம். அடியாளும் வருகிறேன் பிராணேசா.

கெம்பீர்ணசூரன் தரு

கூடவாறேன்என்றுமோடி செய்யலாமோபோடி
ஏடாகூடமாகசாடுவேன் வாளினல்கேடி
ஓடாதேஉந்தனை தாடாண்மைகாரிநீவாடி
சாடையாய்பேசுறாய் வேடுவச்சிபோலதேடி கூ

கற்பகவல்லி தரு

நானுங்கூடவாறேன்நாதா இந்த
நங்கையாளைசேரும்வேதா
கானகத்தில்சென்று கண்ணாளாநீர்மாண்டால்
மானிலத்திலுள்ள மங்கையர்கையாரோ நா

கெம்பீர்ணசூரன் கந்தார்த்தம்

சண்டாளிபட்டிமுண்டை தரணியில்உன்னைப்போல
உண்டோடிவையகத்தில் ஒருவரைகண்டதில்லை
பண்டென்றுநினைத்திட்டாயோ பளாய்பளாய்நல்லவார்த்தை
சண்டனுக்கிறையாய் உன்னை,

தரு

சாடுவேனேவாளினல் உன்னைபோடுவேனே
தாடாண்மைகொண்டாயோ தாசிபோல்கைநீட்டி
தேடிஐவரைக்கொன்று சிந்தைமகிழ்வேனடி சாடு

கற்பகவல்லி கவி

ஐயையோஎன்னசெய்வேன் அரும்பாவிபெண்பிறந்து
மெய்யது தளர்ந்துவாடி மேனியுந்தளரலானேன்
பொய்சொல்லா அரிச்சந்திரன்தன் பொற்கொடியாளைப்போல
மையுமேபொட்டிழந்தேன் மஞ்சளுக்காசையானேன்,

கற்பகவல்லி திரிபுடை தரு

தெய்வமேநானென்னசெய்வேன் தீவினைக்காளாகினேன்
மையிழந்தேன்பொட்டிழந்தேன் மஞ்சளதுநானிழந்தேன்
கண்ணாளர்சென்றவர்தான் எப்போவந்துசேர்வாரோதான்
கண்டதொருசொர்ப்பனம்போல் மீண்டுதோடிநாதருக்கு
சண்டாளிநான்பிறந்து தவிக்கிறண்டிசேடிகளா

பொது வசனம்

அகோதெப்படியென்றால் கெம்பிர்ஞசூரன் தனது தேவியாளாகிய கற்பகவல்லியை அடித்து தாத்திவிட்டு கானகம் நாடிவா அக்தசமயத்தில், தருமர் வீமன் அர்ச்சுனன் நகுல சகாதேவன் தர்பார் நாடி வருவது.



தருமர் அர்ச்சுனன் நகுலசகாதேவன் கவி

சதிகாரன்சகுனிமாமன் கற்பனைதனைநினைந்து
பதின்மூன்றுவருஷகாலம் பகர்வனம்ஓட்டிவைத்தான்
அதுமுதல்இதுநாளாக அங்கமும்மெலிந்துவாடி
துதிபெருஞ்சபைக்குதர்மர் துயரமாய்வருகின்றரே.

தருமர் தரு

குருகுலந்தனில்வந்த வருமனுநீதிதேர்ந்த
தருமர்கொலுவதாகினர் மூன்றும்வனத்தில்
தருமர்கொலுவதாகினர்
திருமாலின்பாதந்தன்னை தினமும்மறவாசீலன்
அறம்பொருள்நீதிசாஸ்திரம்அனைத்துமுணர்ந்தலோலன்

சருள் அந்தாதுந்துமி வாத்தியம்பாட
சந்திரதம்பிமார் இருபுரம்காட குரு

பாவிதுரியனென்னை பதின்மூன்றுவருஷமாய்
ஆவிபதரும்படி அலையவிட்டான் சண்டாளன்

சருள் அஞ்சுதேஎன்மனம் சஞ்சலமாகுதே
வஞ்சனைசெய்ததால் என்மனம்வேகுதே குரு

பதின்மூன்றாந்துலைத்தாலே பாகந்தருவேனென்று
பகர்சபையில்பெரியோர் நிகரமாய்நேமித்தார்கள்

சருள் பாழுஞ்சென்னம் நான்எடுத்தேனே
வழ்வினைப்பயனை ஒழித்திடத்தானே குரு

பதிபுகழும்வரிஞ்சிப்பாக்கம் நகரில்வாசன்
பகரும்வேடப்பனீன்ற கோதண்டராமதாசன்

சருள் பாடியசெந்தமிழ் பாவிடஉலகினில்
தேடியேசெந்தமிழ் சிந்தைகளித்திட குரு

தருமர் கவி

வசுதேவதேவபுத்ரா வண்டணிதுளபமார்பா
தசமுகாரவணன்தன் சிரசைகண்டித்தமாலே
சிசுபாலன்தன்னைக்கொன்ற சீதரமுகுந்தவாசா
விசுவாசம்இல்லையோதான் வேணுகோபாலகிருஷ்ணா

தருமர் தரு

ஐயையோபடுபாவிஅடவிதனில்விட்டான் ஆதிமூலமே
மெய்யும்பதறியேவீண்பழிக்காளானேன் ஆதிமூலமே

தெய்வமேஎன்னசெய்வேன்தீவினைக்காளானேன் ஆதிமூலமே
திக்கில்லாபாவியாய்மக்கிமடியலானேன் ஆதிமூலமே

அபயமிட்டலறியஆனைக்கருள்தந்த ஆதிமூலமே
அறியாதசிறுபாலனபிரகலாதனைக்காத்த ஆதிமூலமே

அன்றுமின்றும்ஐவரென்றும்உந்தனடிமை ஆதிமூலமே
அடவியில்எங்களைக்காத்திடவருவாய்நீ ஆதிமூலமே

ஆபத்தைத்தீர்த்தவா அனாதரக்ஷகனே ஆதிமூலமே
அரிகரியேஉந்தன் அருள்தனைதரவேண்டும் ஆதிமூலமே

பொது வசனம்

அகோதெப்படியென்றால் ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி தருமநந்தனர் தவுத்தியம் செய்ய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாண்டவாளை காணும்படி வருவது.





கிருஷ்ணன் வருகிற கவி

பாண்டவாள்கானகத்தில் பதறியேபுலம்பும்போது
நீண்டசங்காழிகொஞ்ச நிரந்தரமானஸ்வரூபன்
வேண்டியவிருதுகொஞ்ச விண்ணவாதிசயிக்க
வண்டணிதுளபமார்பன் மாயவன்வருகின்றேனே.

கிருஷ்ணன் தரு

துஷ்டசங்காரமூர்த்தியும்தானே துளபமார்பன்
பக்ஷிவாகனம்ஏறுவோன்தானே
அஷ்டலக்ஷிமிமார்பன் அனந்தசேஷசயனன்
இஷ்டம்போல்இரண்யனை குத்திஉடல்கிழித்தேன்

சுருள் இருகாந்தனில் சக்கரந்துன்ன
அருமறையோர்களும் வேதமும்பண்ண துஷ்

துஷ்டன்சோமுகன்தன்னைகொன்றேன் பூதகிபாலை
கஷ்டமில்லாமல்உரித்து வென்றேன்
பக்ஷிவாகனமேறி பக்தர்க்குமுத்திதந்தேன்

சுருள் பத்தியாய்கோபியர் நத்தியேசூழ
நித்தமும்அடியார் என்னடிதாழ துஷ்

பாண்டவாளைவரையுங்காக்க கானகஞ்சென்று
பத்தினிபாஞ்சாலிதுயர் தீர்க்க
தாண்டவமாடுமீசன் தனஞ்செயனாய்பிறந்தான்

சுருள் தரணியில்துஷ்டர் மதமடக்கினேன்
அரவணைமீதில் நடனம்புரிந்தேன் துஷ்

வையகம்புகழ்வரிஞ்சிப்பாக்கம் நகரில்வாசன்
வன்னியர்குலத்தில்வந்த கோதண்டராமதாசன்
அருள் வஞ்சியாள்யாக சேனியைதுதிப்பவர்
அஞ்சலிசெய்தேன் ஆதரிப்பீர்கள் துஷ்

கிருஷ்ணன் கவி

மாதவாஎந்தன்வரலாற்றைச் சொல்வேன்வண்மையுடன்
யாதவகுலத்தில் அவதரித்தயசோதைஆவல்தீர்க்க
பாதகிதுஷ்டிபாலேயும் உரிந்துபாடி தன்னில்
சிதானுகசெனித்தேன் தேவதேவகிக்கு.

தருமர் தரு

மாதவாசரணம் துஷ்டசங்கார
கேசவாசரணம்
மாதவாகேசவா மங்கைருக்மணிலோலா
சிதாாஎங்களை சேதம்வாாமல்காரும் மா

கிருஷ்ணன் தரு

தருமனேவாழி உலகிலென்றும்
தனஞ்செயாவாழி
வருந்திஎந்தனை நீங்கள் வரவழைத்ததென்ன
புரிகுவாய்அனைவரும் புலனைஇன்னதென்று தரு

தருமர் தரு

படுபாவிதுரியன் வஞ்சகஞ்செய்து
பாழ்வனமோட்டிவைத்தான்
அடவியில்ஐவரும் ஆவியும்தளர்ந்துமே
கெடுதிஇன்னமுமுண்டோ கேசவா ஓதுவீர் படு

கிருஷ்ணன் தரு

சொல்லுவேன்கேளும் தருமபூபா
வல்லவாநாளும்
அல்லும்பகலுமாக அரிவைதுரோபதைதன்னை
தொல்லைவாாமலே தோகையைகார்ப்பீரே சொ

தருமர் தரு

ஐவாாலாவதென்ன தாங்களிருக்க
அனந்தசேஷசயனு
வையகம்அளந்தவா வாமனகேசவா
மெய்யாஉள்ளதை விபரமாய்உரைப்பீரே ஐவ

கிருஷ்ணன் தரு

என்னென்றுசொல்வேன் கானகந்தன்னில்
இனிவருந்தீமை
அந்தராக்ஷதர் அடவியில்வருவாரே
சின்னுபின்னஞ்செய்வான் மன்னவாநான்போறேன் எ

தருமர் கவி

கெடுமதிவருகுமென்ற கேசவாசொன்னதாலே
படுபாவிசெயதசூதால் பாழ்வனந்தன்னில்வந்தோம்
தடுமாறிஎனது உள்ளம் தயங்கியேமயங்கலானேம்
இடர்வரும்விதத்தைநன்றய் இன்னதென்றுரைத்திடீரே.

தருமர் வசனம்

அரிகரி! முகுந்தா! அச்சுதானந்தா! கேசவா! மாதவா! அனந்த சயனு! அடியேன் உன்செயலால் உன்னையே அல்லும் பகலும் நினைந்து கானகத்தில் வசிக்கின்ருேம். எந்த கேடுவந்தாலும் தங்கள் செயலே தவிர வேறென்றில்லை இன்றையததினத்தில் இந்த வனத்தில் நாங்கள் எவ்விதம் சஞ்சரிப்பது. ஆனல் என்ன கெடுதி நேரிடப்போகிறது. அதை எனக்கு விபரமாய் சொல்லும் சுவாமி.

கிருஷ்ணன் வசனம்

கேளாய் தருமநந்தனு! உங்களுக்கு வரும் கெடுமதியைத் தெரிவிக்கின்றேன் என் தங்கை பாஞ்சாலியை அழைத்துவாரும் மைத்துனு.

பொது வசனம்

அகோதெப்படியென்றுல் தருமர் தனது தேவியாளாகிய பாஞ்சாலியம்மன் சபையை நாடிவருவது.



பாஞ்சாலி வருகிற கவி

மன்னவரழைத்தசேதி மங்கையர்கூறக்கேட்டு
அன்னமின்னடைகுலுங்க அரிவையர்அருகில்சூழ

உன்னிதசரிகைசேலை ஒளிர்வதுபளபளென்ன
கன்னியாள்யாகசேனி கனசபைவருகின்றாளே.

பாஞ்சாலி தரு

அக்கினியில்உதித்த உக்கிரவீரசக்தியாள்
அம்மன்பாஞ்சாலிவந்தாள் தாதியர்சூழ
பக்குவமாகநாதர் பாங்கியர்களைவிட்டு
அக்கறையாகவே அழைத்தவிதம்அறிய

சுருள் ஆசையாய்நாதர் தன்னடிகாண
நேசமதாகவே சொல்லுவேன்தோண அக்

கொத்துசரமிலங்க கோர்வைமணிதுலங்க
பத்தினியாளென்று பாருலகந்துதிக்கும்
சுருள் பாதசரங்கால் மோதிரந்தண்ண
நாதரழைத்ததை ஓதடிபண்ண அக்

பாவித்துரியன்சூதால் ஆவியும்வாடுதையோ
காவியங்கானகத்தில் கலங்கித்திரியலானேன்
சுருள் கண்ணனருளாது என்னமாய்முடியுமோ
வண்ணமாய்கூந்தலை என்றுமுடிப்பேனோ அக்

குறத்திநகரில்வாழும்பாலன் வைத்தியலிங்கன்
கூறுந்தவத்தில்வந்தசீலன்
சிரத்தையாய்காளைவீர சுவாமியைத்துதிப்பவர்
சுருள் செப்பியஇந்நூல் தப்பிலாகேழ்க்க
இப்பவேவீரப்பன் இம்மொழிகூறுவேன் அக்

துரோபதை கவி

படுபாவிதுரியராசன் பஞ்சவர்களைவஞ்சித்து
அடர்வனம்ஓட்டிவைத்தான் அங்கமும்பதறிவாட
கடுமொழிகூறி துர்ச்சாதனனையும்விட்டுயென்னை
கொடுந்துரோகிதுயிலுரிந்தான் குமறுதேமனமெனக்கு.

துரோபதை வசனம்

கேளாய் சகியாள்! பாவியாகிய துரியோதனன் குரு பெரியோர்களை வைத்து பகடை சூதாடி நாடு ராச்சியத்தைப் பறித்துக் கொண்டு நிரந்தரமான சபையில் வைத்து தம்பியாகிய துர்ச்சாதனனை விட்டு துயிலுரிந்து பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஓராண்டு அக்கியாதவாசமும் ஒட்டிவைத்தான். துரியன் கட்டளைக்குத் தவராமல்படிக்கு மூன்றுவது சயிந்தியவனம் வந்திருக்கின்றோம். நாதரைக் கண்டு சேவித்துக்கொள்வோம் அடி சகியாள்.

பாஞ்சாலி தரு

மன்னுஉந்தன்பாதத்திற்கே மங்கைவந்தனம்
நாதாமங்கைவந்தனம்
சின்னஞ்சிறுவயதில் சேடியர்களைவிட்டு
என்னகாரணத்தினுல் என்னைவரவழைத்தீர் ம

தருமர் தரு

பாஞ்சாலராசன்செல்வி பாவையேவாழி
பத்தினியேசுகமாய் வாழ்குவாய்மாதே
அஞ்சனவிழியாளான அரிவையென்தேவியாளே
சஞ்சலம்நேர்ந்ததென்று தையலேவிசனம்வேண்டாம் பா

பாஞ்சாலி தரு

தருமகுணங்களோத்த பிராணநாதாஇந்த
தையலரைஏன் அழைத்தீர்திவ்யபாதா
வறுமைகளையுரைத்தால் வையகந்தனிலுள்ள
பெரியோர்சிறியோரெல்லாம் பேசஏளனமாகும் த

தருமர் தரு

என்னகாரணத்தினுல் ஏளனமாகுமடி
செய்குவாய்நானறிய பத்தினியாளே
சின்னஞ்சிறுவயதில் உன்னைவிசையன்வந்து
கன்னியேமாலையிட்டான் கலக்கம்வந்ததென்னடி ஏ

பாஞ்சாலி தரு

பார்த்தீபன்என்னைமாலை சூட்டினநாள்முதலாய்
பாழும்வனத்தில்வந்து நாளைகழித்தேன்
நேற்றுசயிந்தவனுல் பாவித்துரியனென்னை
சேர்த்துஎடுக்கும்படி கீர்த்தியாய்என்னிடம்வந்தான் பா

தருமர் தரு

பாவித்துரியனவன் பதின்மூன்றுந்துலைக்கவே
பாகந்தருவேனென்ருன் பாஞ்சாலியே
ஆவிப் பதரும் ஐவருக்கானகத்தில்
ஆரண்யவாசஞ்செய்தோம் பாஞ்சாலியே பா

தருமர் கவி

பத்தினியானயெந்தன் பாவையேசொல்லக்கேளாய்
சித்தமுங்கலங்கிவாடி தியங்கிடவேண்டாம்பெண்ணே
சத்துருதுரியனிட்ட தவணைநாள்கழிக்கவேண்டும்
குற்றங்கள்வந்திடாமல் கோபாலனைக்கண்டுகொள்வாய்.

தருமர் வசனம்

கேளாய் பெண்ணே பாஞ்சாலி! நமக்கு வந்ததை நாமே அநுபவிக்கவேண்டும். ஆகையால் இனி நடக்கவேண்டியது இன்னது இன்னதென்று தெரியவில்லை. ஆகையால் உனது அண்ணன் கண்ணபிரானைக் கண்டுகொள்ளும் பெண்ணே.

துரோபதை தரு

கழலடிமலைமீதில் என்ற மெட்டு

அரக்கர்குலத்தைபறக்கச்செய்த அண்ணாஉன்பதமே
அடிபணிந்தேன்நிதமே
பறக்குங்கெருடன்மீதில்வதி பார..... அளந்தவா
பக்தர்களைக்காத்தவா
பக்ஷமதாய்க்காரும் பாவிஎன் துயர்தீரும்
சருள் பத்தினிதுரோபதை சித்தங்கலங்கிட
வெற்றிகளித்து சந்தோஷங்கள்கொண்டீரோ அரக்

கிருஷ்ணன் தரு ஷை மெட்டு

காங்குவித்துசரணஞ்செய்த கன்னிஎந்தன்தங்கையே
காண்டீபனார்மங்கையே
துரியன்செய்தசதியழிக்க தோன்றினேன்பாந்தாமனாய்
செகத்தினில்அரிராமனாய்
சூதும்வாதும்வேதனையென்று செப்பினாளே ஔவையார்
தப்பில்லாமலேசெவ்வையாய்
தனஞ்செயனார்தேவியே தாரணியில்வாழ்வாய்மேவியே
சருள் தஞ்சமில்லாமலே பஞ்சவர்தனக்கு
சஞ்சலம்தீர்ந்திட வஞ்சமில்லாமலே காங்

பாஞ்சாலி கவி

எந்தனை அழைத்தசேதி ராகவாவிபரமாக
சிந்தையில்மகிழ்ச்சியாக செப்பிடவேவேண்டுமிப்போ
கந்தநற்குழலாளான காண்டீபன்தேவியாளும்
உந்தனின்பதம்பணிந்தேன் உண்மையையுரைத்திடாயே.

கிருஷ்ணன் தரு

என்னென்றுசொல்லுவேன் தங்கையே என்மனந்
தேங்குதேஇங்கையே
அன்னீதாரகூதர் அடர்வனம் அடர்வனம்மாச்சுதே
சின்னாபின்னம்நேரும் சென்றுவாரோனம்மா என

பாஞ்சாலி தரு

என்னகெடுமதிஅண்ணா அதை
என்னிடஞ்சொல்லுவாய்கண்ணா
கன்னியாள்மனம்வாட கபத்தகம்பேசுகிறாய்
மன்னவரும்நானும் மனம்வாடி தவிக்கிறோம் எ

கிருஷ்ணன் தரு

வருகிறான்ராக்ஷதன்இங்கையே மனம்
வாடி தவிக்கிறாய்தங்கையே
கருகுதேஎன்மனம் காரணத்தைச்சொல்ல
ஒருவிககா- ணம ஓகோநான்போய்வாரேன் வ

பாஞ்சாலி தரு

போகாதீர்போகாதீர்அண்ணா வரும்
பொல்லாங்குஎன்னமோகண்ணா
ஆகாதவார்த்தைகள் அண்ணாநீர்சொன்னீரே
வேகுதேஎன்மனம் வெந்தணலாகுதே போ

கிருஷ்ணன் தரு

கெம்பிர்ணசூரனும்வந்து உன்னைக்
கிட்டியேதூக்குவான்சொந்து
அம்புவிராசர்கள் ஐவருமுன்னே
துன்பம்வந்தணுகிடும் தோகையேபோய்வாரேன் கெ

பாஞ்சாலி கவி

கெடுதிகள்வருகுமென்றீர் செம்பிர்ணசூரனாலே
படுபாவிஎன்னைவந்து பற்றியேசெல்வான்என்றீர்
அடவியில்ஐவர்க்குமுன்னே அரும்பாவிஉயிரின்று
கடுகியேமாய்த்துக்கொள்வேன் கார்வண்ணமேகவண்ணா.

பாஞ்சாலி வசனம்

சரணம் சரணம் அண்ணா! தாங்கள் இருக்க எனக்கு யாரால் என்ன கெடுதி நேரிடும். அப்படி ஒருவன் கை என்மீதில்படுவதும் உன் கண்ணெதிரே என் உயிரை மாய்த்துக்கொள்வேன் அண்ணா.

கிருஷ்ணன் கவி

அம்புவியோர்மதிக்கும் அருமையென்தங்காகேளாய்
சம்ப்ரமாய்உயிரைமாய்த்து தரணிதனில்மடியவேண்டாம்
கெம்பிர்ணசூரன்வந்து கிட்டியேநெருங்கிவந்தால்
வம்பவிழ்கோதையாளும் வட்டப்பாறையாய்சமையவேண்டும்.

கிருஷ்ணன் வசனம்

கேளும் அம்மா தங்கையே! கெம்பீர்ஞசூரன் உன்னைத் தூக்கி செல்ல பாண்டவாள் இல்லாத சமயம் பார்த்து வருவான். உன்னைக் கையால் தொட்டு எடுக்குமுன்னமே நீ வட்டப்பாரையாக சமைந்து விடுவாய். அவனால் உனக்கு ஒருவித கெடுதிநேரிடாமல் காத்து ரக்ஷிக்கிறேன். நான் எதாஸ்தானம் சென்றுவருகிறேன் தங்கையே

பாஞ்சாலி தரு

வெற்றிமதவீமனெங்கே சித்தமகிழநன்றாய்
உற்றபதிலுரைப்பீர் பிராணநாதா
சற்றேயோசித்தெனக்கு வித்தகாநீருரைத்தால்
பத்தினியாள்மகிழ்வேன் நவநீதா வெ

தருமர் தரு

வனத்தில்கனிபறிக்க வல்லவன்மதவீமன்
க்ஷணநேரத்திற்குள்சென்றான் பெண்மயிலே
கானகத்தில்அழைத்து கன்னியரேவசிப்போம்
வானோர்புகழும்மட மாமயிலே வ

தருமர் வசனம்

கேளாய் பெண்ணே பாஞ்சாலி! வீமசேனன் வனசஞ்சாரம் சென்று காய்கனி கந்தமூலங்களைக் கொண்டுவர சென்றிருக்கிறான். அவனை அழைத்து நடக்கவேண்டிய சமாச்சாரங்களை உரைத்து கும்பலாக செல்வோம் பாஞ்சாலியே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் தருமநந்தனர் தனது தம்பியாகிய மதவீமனை அழைக்க வீமசேனன் சபையைநாடி வருவது.

வீமன் வருகிற கவி

அண்டாண்டமுனிவர்களும் மனங்கலங்க
ஆக்கரித்துசிங்கம்போல் எகிறிபாய்ந்து
தெண்டுடனேதோமாமும் பாலாயீட்டி
திசையெலாம்நடுநடுங்க மனம்ஒடுங்க
குண்டலமும்செவிதனிலே குலுங்கியாட
கோடையிடிஇடித்தாப்போற் பற்கடித்து
சண்டனெனகண்டவர்கள் திடுக்கிட்டோங்க
சபைநாடிமதவீமன் வருகின்றேனே.



வீமன் தரு

சந்திரகுலத்தில்வந்த தருமர்க்குநேரிளையோன்
விந்தையுள்ளகுந்திமைந்தனும் வீமசேனராசன்
வேடிக்கையாய்வந்துமேவினேன்

திக்குதிசையோர்நடுங்க தேவர்சள்மனம்ஒடுங்க
உக்ரகோபங்கொண்டுமீறியே வீமசேனராசன்
உல்லாசமாய்வந்துமேவினேன்

சண்டாளத்துரியன்தன்னைக் கண்டால்என்கண்எதிரில்
மண்டையைசிதறவாட்டுவேன் வனம்ஓட்டின
மடையனைப்பிடித்துஆட்டுவேன்

பகடைசூகாடச்செய்தான் பாதகன்சகுனிமாமன்
பகர்வனந்தன்னில்ஓட்டினான் பாவிசண்டாளன்
பக்ஷமில்லாகாட்டைகாட்டினான்

வீமன் தரு

சரணம்புரிந்தேன் அண்ணா தாளிணைதன்னில்
சரணம்புரிந்தேன் அண்ணா
சரணம்புரிந்தேனுந்தன் தாளடிதன்னில்வீமன்
கருணைவைத்தென்னைநீரும் கடையேன்மேல்கண்பாரும் சர

தருமர் தரு

வாழ்குவாய்எந்நாளும்வீமா மானிலந்தன்னில்
வாழ்குவாய்எந்நாளும்வீமா
வாழ்குவாய்நீடூழியாய் தாழ்வதுவாராமல்
ஊழ்வினைகளை ஒழித்து ஒருவரெதிரில்லாமல் வா

வீமன் தரு

என்னையழைத்ததென்னமோ அண்ணாவேநீரும்
என்னையழைத்ததென்னமோ
என்னையழைத்தவிதம் இன்னதினியதென்று
தன்னந்தனியாக தனயனுக்குரைத்திடுவீர் எ

தருமர் தரு

கானகஞ்செல்லுவோம்தம்பி கும்பலாய்கூடி
கானகஞ்செல்லுவோம்தம்பி
கானகத்தில்சூரியன் கட்டளைத்தவாமல்
தீனதயாபரனைதினமுந் துதிசெய்குவோம் கா

வீமன் தரு

பாவித்துரியனவன் பகடைசூதாடச்செய்து
பகர்வனம்ஓட்டிவைத்தான் சண்டாளன்
ஆவிப்பதரும்படி அலைகிறோம்கானகத்தில்
அண்ணாஉன்மனந்தனில் எண்ணிப்பாரும்நன்றாய் பா

தருமர் தரு

பொறும்பொறும்பதறாதே வீமாயென்தம்பி
பொறும்பொறும்பதறாதே
பொறுமைப்படைத்தவர்க்கு பொல்லாங்குஇல்லையென்று
தருமநூல்சாஸ்திரத்தில் தானேஅறியலியோ பொ

வீமன் தரு

எந்தவனத்தில்நாமும் இன்றுசஞ்சரிப்பது
நன்றாய்எனக்கறிய நவிலுவீர்எந்தன்அண்ணா
அன்றுமின்றும்நம்மை என்றும்ஆதரித்த
அரவசேஷசயனன் விஷயம்என்னென்றுரைத்தார் எ

தருமர் கவி

அருமையென்தம்பிமாரே அனைவரும்வெவ்வேறாக
நறுமலர்பாஞ்சாலிக்கு நல்லதோர்கனிகளாக
பறித்துமேஎடுத்துநீங்கள் பதனமாய்வைத்துக்கொண்டு
கருத்துடன்வந்துசேர்வீர் கானகஞ்சென்றுநீங்கள்

தருமர் வசனம்

ஆனல் கேளும் தம்பி வீமசேன! அர்ச்சுன! நகுலா! சகா தேவா! நீங்கள் நால்வரும் நான்கு திசையாகச் சென்று நல்ல கனிகளாக பரித்து வாருங்கள் நானும் பாஞ்சாலியும் பர்னகசாலை யில் வீற்றிருக்கின்றோம் தம்பிமார்களே.

வீமன் கொண்டிச்சிந்து

விடைபெற்றுநடந்தேனே மதவீமன்
விண்டலத்திலுள்ளவர்கண்டுநடுங்க
தடைஎன்னநானுஞ்சென்று கானகத்தில்
தெண்டாலடித்துகனிகொண்டுவருவேன்
அடவியில்நான்நுழைந்து புலிகளை
அல்லல்பட்டோடிடவேவில்லாலடிப்பேன்
எகிறியேமாங்களெல்லாம் வளைத்து
எட்டியேகிளைகளில்கனிபறிப்பேன்
ராக்ஷதர்எதிர்த்தாலும் வனத்தில்
நானேபிடித்தவரைகசக்கிடுவேன்
வானவர்வந்தாலும் எதிரில்
வளைத்துப்பிடித்தவரைகசக்கிடுவேன் தந்தன

தருமர் கவி

ஆசையென்பிராணதேவி அறைகுவேன்வார்த்தையொன்று
பூசைகள்முடிப்பதற்கு பெண்ணேநீவிடைகொடுப்பாய்
தாசர்கள்துதிக்கும்விஷ்ணு தன்னிடபாதம்போற்றி
பாசமாய்வருவேன்பெண்ணே பாவையேயனுப்பிவைப்பாய்.

தருமர் வசனம்

கேளாய் பெண்ணே பாஞ்சாலி! நீ பர்னகசாலையில் பதனமாய் இருக்கவேண்டும் நான் சென்று காலைக்கடன்களை முடித்து பூஜை செய்துவிட்டு வருகிறேன் பெண்ணே பாஞ்சாலி!

பாஞ்சாலி தரு

எவ்விதந்தனித்திருப்பேன் எனதுநாதா
எவ்விதந்தனித்திருப்பேன்
எவ்விதமாகவுன்னை ஒவ்வியேகானகத்தில்
கவ்வுதேஇருள்வந்து கானில்பயமாகுதே எவ்

தருமர் தரு

பதாாதேபாஞ்சாலியே கானகந்தன்னில்
பரந்தாமன்அருளாகுமே

பதறிநீ அழுவேண் டாம் பாந்தாமன் ஆதரிப்பார்
அதர்மம்வந்தணுகாது அல்லல்படவும்வேண்டாம் பத

தருமர் வசனம்

கேளாய் பெண்ணே பாஞ்சாலி! சந்தோஷகரமாக எனக்கு விடைகொடுத்தால் பூஜை முடித்துவருகிறேன் பெண்ணே.

பாஞ்சாலி வசனம்

ஆனல் கேளும் பிராணேசா! நான் பர்ணகசாலையில் வீற்றிருக்கின்றேன் சீக்கிரஞ் சென்று பூஜை முடித்து வாரும் சுவாமி!

தர்மர் பூஜை தரு

பூஜைபுரிந்திடுவேன் மேகவண்ணன்
பூஜைபுரிந்திடுவேன்
பூஜைபுரிகுவேன் புண்டரீகனைநோக்கி
தாசாதிதாசனல் தருமர்கரங்கூப்பி பூ

சங்காழிஏந்துங்கையா ஜனர்த்தன
தாடகையாள் சம்மாரா
எங்கும்நிறைந்தவா ஏழையைக்கார்த்தவா
பங்கயவதனஎன் பாவைருக்மணிநேயா சங்

ராவணசங்காரா நாசிங்கஅவதாரா
நாராயணவருவாய்ஏழை முன்னேநாராயணவருவாய்
பாராயணஞ்செய்தேன் பத்தாவதாராநான்
காரும்காரும்என்னைக் கமலக்கண்ணவண்ண பூ

ஜானகியின்மாரா சர்ப்பமணியுந்தீரா
கானகத்தில்தர்மர் கதறியேவாடுகிறேன்
ஏனினிஅடியேன்மேல் இன்னந்தயவில்லை
தீனதயாபரா திங்கள்குலசேகரா பூ

கெம்பீர்ணசூரன் தரு

ரதத்தைநடத்திஓட்டும் ஐவரிட
ராணுவப்பலன்களைநான் அறிந்திடவே

பதைத்துமேவிழுகுதுபார் மிருகங்கள்
பன்றிமுயல்களைநான்கொன்றிடவே

அதிர்ச்சிகள்கொள்ளுதுபார் கானகம்
அண்டரண்டங்களெல்லாம் ஒன்றுகவே

பதறியேஓடுதுபார் வேங்கை
பதைத்துக்கொதித்துமே மனஞ்சலித்து

பஞ்சவர்இருக்கும் வனத்தைத்தேடி
படபடவென்று ீதர் வருகுதுபார்

அஞ்சாமல்கானகத்தில் நுழைந்து
அடர்ந்தவனங்களெல்லாந் தேடிவருவேன்

பாஞ்சாலியாளைக்கண்டேன் கண்ணால்
பர்னகசாலையில் உன்னிதமுடன் ரத

பாஞ்சாலி கவி

அரும்பாவிபெண்பிறந்து ஐவரைமாலையிட்டு
வரும்பலன்ஒன்றுமில்லை வையகந்தனிலெனைப்போல்
நறுமலர்க்குழலாளான நங்கையர்எனைப்போலுண்டோ
சரியல்லஏங்கி தையலாள்கதறலானேன்.

பாஞ்சாலி வசனம்

ஐயையோ தெய்வமே! இப்பாழாகிய பிரபஞ்சத்தில் என்னைப் போலொத்த ஸ்திரீகளில் என் பாவத்தையும் செய்து பிறந்திருப் பார்களா தெய்வமே.

கெம்பீர்ணசூரன் தரு

மனதிற்கிசைந்தகண்ணாட்டி மதனரதியோஇவள்
பருவமுகவதனி மனதிற்கிசைந்தகண்ணாட்டி

அதனவடிவமுள்ள அரிவைப்பசுங்கிளியோ
மனவருத்தம்இல்லாமல் மையல்தனைத்தீரடி

சுருள் மட்டித்தனமாயென்முன் அட்டிசெய்யாதடி
கட்டிக்கரும்பேயிளங் கனியேஎனைப்பாரடி மன

பாஞ்சாலி தரு

என்னமாய்கையோ அறியேன்
ரிஷபவாகனன் தன்னிடகூதோ

அன்னீதமாய்அரக்கன் அலங்கோலம்வந்து
என்னைஅவமதிப்பாய் ஏதேதோவைகுறானே

சுருள் என்னடிஎன்மனம் கன்னியேவேகுதே
சொன்னவார்த்தை தோகையேநாணுதே என்

கெம்பீர்ணசூரன் தரு

மாரன்வாதையைநீக்கடிமங்கையே பசுங்கிளியே
தங்கமேஇளங்குயிலே மாரன்வாதையைநீக்கடி

பாரவனங்களெல்லாம் பார்த்துதேடிவந்தேண்டி
காரார்குழலியரே கன்னியேயென்னைப்பாரடி

சருள் கத்திக்கதறுவது சற்றுந்தயவில்லையோ
பற்றியிழுப்பேன்பாவையே இனிதொல்லையோ மார

பாஞ்சாலி கவி

பஞ்சவர்தனக்குத்தேவி பத்தினியாளுமானல்
அஞ்சுதோராக்ஷதன்கை அரிவைமேல்பட்டிடாமல்
கஞ்சனைவதைத்தகண்ணா கரிமுகில்வண்ணாகல்லாய்
வஞ்சியாள்சமையவேண்டும் வண்டணிதுளபமார்பா.

பாஞ்சாலி வசனம்

அரிகரி! முகுந்தா! அனுதாரக்ஷகா! ஆபத்பாண்டவா! அடியேன் பதிவிரதையானல் இந்த ராக்ஷதன்கை என்மேல் படாமல் மன்ன வர் வருகிறபரியந்தம் நான் இங்ஙனமே கல்லாய் சமைந்து இருக்க வேண்டும் கண்ணா.

வீமசேனன் தரு

வனத்தில்கனியைப்பறித்து மதவீமன்
வாருவலயத்துடன் ஏகமனதால்
மனதில்சந்தோஷமுடன் பர்ணசாலை
மங்கையாளிருக்கும் இடந்தனைத்தேடியே

வனமெல்லாந்தான்கடந்து வேகமாய்
மங்கையாள்பாஞ்சாலி இடம்வந்துமேசேர்ந்தான்
மன்னவன்மதவீமன் வந்திடமங்கையாள்
பாஞ்சாலியும் எழுந்துநின்றுள் வ

பொது வசனம்

அகோதெப்படியென்றால் வீமசேனன் காய்களைப் பறித்து பர்னகசாலை அருகில் வந்ததும் கல்லாய் இருந்த பாஞ்சாலி சுய உருவம் ஆகிவிட எதிரில் இருந்த கெம்பிர்ணசூரனை வீமசேனன் கண்டு ஏதென்று சொல்வது.

வீமன் கந்தார்த்தம்

ஆரடாபயலேநீதான் அஞ்சாமல்கெர்வங்கொண்டு
கூரடாஊரும்பேரும் கொப்பெனவாளினலே
மாறுபாடாகசொன்னல் மடையனேஉன்னையிப்போ
தேரோடுளடுத்துஉன்னை,

தரு

செண்டதைப்போலவேஎறிவேன் மடையாஉன்னை
மண்டையைஉடைத்துஅறிவேன்

அண்டர்முனிவர்களும் அச்சங்கொள்வாரிங்குவா
எண்டிசையுந்தானடுங்க இக்ஷணமுனைக்கண்டிப்பேன் செ

கெம்பிர்ணுசூரன் கந்தார்த்தம்

மூடனேவிதிதானின்று முடிந்ததுஎந்தனாலே
காடெல்லாம்சஞ்சரித்த கர்வமோஉந்தனுக்கு
தேடியேவந்திட்டாயோ தென்திசைநகரஞ்செல்ல
வாடாநீசமர்கள்செய்ய,

தரு

வல்லங்கட்டாரிஎடுத்தேன் உந்தனைக்கொல்ல
அல்லலில்லாமல்வந்துகுதித்தேன்

பல்லையும்நறநறென்று பஞ்சப்பயலேகடித்தேன்
எல்லைவிட்டுப்போகுமுன்னே இக்ஷணம்உனைமடிப்பேன் வ



வீமன் தரு

தெண்டினால்உந்தனைமடிப்பேன் மூடப்பயலே
கண்டிதமாய்பல்லைஉடைப்பேன்

அண்டர்முனிவர்களும் அச்சங்கொள்வார்வீமனென்றால்
எண்டிசையுந்தானடுங்க இக்ஷணம்உனைகண்டிப்பேன் தெ

கெம்பீர்ணசூரன் தரு

அச்சமற்றுவந்துஎதிர்த்தாய் நாப்பயலே
ஆணுவங்கள்கொண்டுகுதித்தாய்
பச்சைக்குத்துங்குறவர்மேல் பஞ்சவர்ஐவர்களும்
லச்சையாய்குறம்பாடியே நாளேக்கழிக்கவந்தீர் அ

வீமன் தரு

ஆணவத்தைநானடக்குவேன் க்ஷணப்பொழுதில்
வேணவித்தைஎல்லாமறிவேன்
பாணப்பிரயோகஞ்செய்து பதைக்கும்படியேஉன்னை
வானவர்கள்தான்மகிழ வல்லயந்தன்னுல்மடிப்பேன் ஆ

கெம்பீர்ணசூரன் தரு

காட்டகத்தில்நீங்கள்திரிந்தீர் வழியில்லாமல்
ஓட்டைவிற்றுகஞ்சிகுடித்தீர்
ஆட்டுவேன்பம்பரம்போல் ஐவர்களேப்பிடித்து
வேட்டைநாயதுபோல வீரியங்கள்பேசவந்தாய் கா

வீமன் தரு

சாமாரியாகவேவினேன் அஸ்திரங்களே
காமதாய்விட்டுவவினேன்
அரவிந்தன்பாதத்தை அஷ்டாக்ஷரத்தைசொல்லி
திரமாய்அஸ்திர சாமாரிபோலவிட்டேன் சா

கெம்பீர்ணசூரன் தரு

விட்டசரந்தனேத்தடுத்தேன் நிமைப்பொழுதில்
அட்டியில்லாமலேமடிப்பேன்
கெட்டிக்காரன்நானென்று கெலித்திடவந்தாயோ
வெட்டியேமடித்திடவே வில்லதைவளேத்தனடா வி

வீமன் தரு

சக்கைசக்கையாகவேமடிப்பேன் சூரனேஉன்னை
இக்கணம்உந்தனேகண்டிப்பேன்
பக்குவமறியாமலே சிக்கிக்கொண்டாணென்னிடத்தில்
கக்கிடஉதிரந்தனே கண்டகாஉன்னேமடிப்பேன் சக்

கெம்பிர்ணசூரன் கந்தார்த்தம்

மும்மூர்த்திதேவர்களும் என்னைக்கண்டால்
முடிவணங்கிதெண்டனிட்டு ஓடுவார்கள்
செம்மையாய்அயனெழுத்து சிரசுதன்னில்
செகமதனிலிருந்திடவே எழுதினரோ
கம்மென்றுவாய்மூடி கையைக்கட்டி
கண்டகாஉயிர்தப்பிப் பிழைத்துக்கொள்ளும்
வம்புவழக்காடினுலுன்னையிப்போ,

தரு

வானமளாவஎறிவேன் மடையாஉன்னை
நானேசெண்டாகஆட்டுவேன்
கானகத்தில்திரிந்து கனிபறித்துதின்னமல்
ஈனசாதிப்பயலே இக்ஷணம்உனைமடிப்பேன் வா

வீமன் கந்தார்த்தம்

யாரரையேமாற்றிப் பூச்சிக்காட்டி
அனுபோகமாகநீ வந்திட்டாயோ
காரக்காய்இன்றவன் வலுவையின்று
கொட்டுவேன்மடப்பயலே க்ஷணகோத்தில்
தேரோடுஎடுத்துன்னை அந்தரத்தில்
சேர்க்காமல்விட்டாலென் பேரைமாற்றி
கூறடாவலுவில்லா மடையனென்று,

தரு

கோடையிடிபோல்தாவினேன் உந்தனையின்று
நாடெங்குஞ்சிரிக்கவினேன்
காடைகழுகுகளும் கவ்விஉனைப்பிடுங்க
தாடாண்மைக்கண்டாயோடா சங்கமாங்கிபையலேநீ கோ

பொது வசனம்

அகோதெப்படியென்றல் வீமசேனன் கெம்பிர்ணசூரனை கொன்றுவிட்டு தனது அண்ணனுகிய தருமரைக்கண்டு ஏதென்று சொல்வது.

வீமன் தரு

பாதமேசரணம் அண்ணவுந்தன்
பாதமேசரணம்

பாதாரவிந்தத்தில் பத்தியாய்மதவீமன்
ஆதாரமாகவே அடிபணிந்தேன் அண்ணா பா

தருமர் தரு

தம்பிநீவாழி மதவீமா
தம்பிநீவாழி

தம்பிநாம்அனைவோரும் கும்பலாய்கூடியே
அம்புவிசென்றிட அநேகநாள்செல்லுமே த

பாஞ்சாலி தரு

பாஞ்சாலன்யாகந்தன்னில் பாலகியாய்ப்பிறந்து
பட்டசுகம்போதும்போதும் ஓதெய்வமே

வையகத்தில்பெண்பிறந்தால் வாழ்குவார்அரண்மனையில்
தெய்வமேஇக்கதிஉண்டோ ஜெகதீசா

வரப்போதலையணையாய் வாய்க்காலோபஞ்சுமெத்தை
வரம்வாங்கிபிறந்தேனே ஓதெய்வமே

தருமர் தரு

அருமையென்தேவியான பாஞ்சாலி
அலறிநீஅழவேண்டாம் யாகசேனியே
வருங்கெதிசொந்தமாய் மடியேந்தவேண்டாமோ
மனதில்விசாரம்வேண்டாம் பெண்மயிலே

பாஞ்சாலி தரு

சென்னியில்அயனெழுத்து செவ்வையாய்எழுதலியோ
சீமைப்பூமியையாள ஓதெய்வமே
மன்னவன்துரியன்என்று மாள்வானோபடுபாவி
வையகத்தைஆள்வோமோ ஓதெய்வமே

தருமர் கவி

உகபலனென்றுசொல்வேன் உத்தமியாளேகேளாய்
சுகந்துக்கம்இரண்டும்ஒன்றாய் சொந்தமாய்அனுபவித்தால்
பகையவர்தானும்மாள்வார் பரிதாபபடவும்வேண்டாம்
தகவல்கள்இதுதான்பெண்ணே சந்தோஷங்கொண்டிடாயே.

தருமர் வசனம்

கேளாய் பெண்ணே பாஞ்சாலி! தம்பிமார்களே! யாதொன்றுக்கும் மனதில் சஞ்சலப்படவேண்டாம். சுகமும் துக்கமும் உலகத்தில் சமமாக அனுபவிக்கவேண்டும். ஆகையால் எல்லாம் கண்ணபிரான் அருளே தவிர வேறொன்றும் இல்லை. இனி நாம் கும்பலாக நான்சாவது வனம் சென்று காலங்கழிப்போம் தம்பிமார்களே.

வாழி விருத்தம்

சுருதிநூலுணர்ந்தோர்வாழி தொல்லுலகத்தோர்வாழி
தருமசாஸ்திரங்கள்வாழி தனுர்வேதம்வாழிவாழி
அருமையாய்நாடகத்தை ஆடினோர்கேட்போர்வாழி
பெருமையாய்நாடகத்தை பாடிஅச்சிட்டோர்வாழி.

செம்பிர்ணசூரன் வதை என்னும்

துரோபதை கல்லாய் சமைந்த நாடகம்

முற்றிற்று.

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாசம் பிரஸ்
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1. (1956)